இந்த அறிக்கையின் பந்தி 1.6 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் 2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது கருத்து முனைப்பழியுள்ளதாக உள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு அலுவலரினதும், கணக்கீட்டு அலுவலரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களை தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வச் சட்டத்தின் 38(1)(இ) உட்பிரிவுக்கு அமைய திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கு விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு கட்டமைப்பை தயார் செய்து பேணிவருவதை கணக்கீட்டு அலுவலர் உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் மேற்படி கட்டமைப்பின் விளைதிறன் தொடர்பில் காலத்திற்குக் காலம் மீளாய்வை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பை விளைதிறன்மிக்கவாறு பேணிவரத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி

அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 1.5 வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவுக்கு அமைய பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்குகின்றன என்பது.

(ஆ) கடந்த ஆண்டு தொடர்பிலான நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் சமர்ப்பித்திருந்த பின்வரும் சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை பந்தியின் தொடர் | கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு |
|---|---|---|---|
| (அ) | 1.2.1 (இ) | களஞ்சிய முற்பணக் கணக்கு 2021 கணக்காய்வு கணிப்பீட்டுக்கு அமைய மீளாய்வு ஆண்டில் வெளியிடப்பட்ட இருப்பின் செலவினம் ரூபா 160,397,852 ஆகும். எனினும் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய விநியோகிக்கப்பட்டதன் பெறுமதி ரூபா 159,042,692 ஆக காணப்பட்டதனால் மீளாய்வு ஆண்டில் இருப்பு விநியோக செலவினம் ரூபா 1,355,160 இனால் குறைவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளமை அவதானிப்புச் செய்யப்பட்டது. | விநியோகிக்கப்பட்ட இருப்பை சரியாக கணிப்பீடு செய்து கணக்குகளில் பதிவு செய்தல் வேண்டும் |

**1.6 நிதிக் கூற்றுகள் பற்றிய கருத்துரை**

**1.6.1 வருமானம் அல்லாத பெறுகைகள்**

**(அ) முற்பணக் கணக்கு**

(i) நிதிக் கூற்றில் ஏசீஏ – 5 மாதிரிப்படிவத்தில் அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணத்தின் கீழ் காசாக முற்பணம் பெறுகை ரூ. 39,800 ஆகும் என்பதுடன், எஸ்ஏ 52 திறைசேரி மாதிரிப்படிவத்தில் காசாக பெறுகை பெறுமதி ரூ. 18,672,188 ஆகக் காணப்பட்டது. எனவே, காசாக முற்பணம் பெறுகை மாதிரிகள் இரண்டிற்கும் இடையே ரூபா 18,632,388 ஆன வித்தியாசம் காணப்படுவது அவதானிப்புச் செய்யப்பட்டது. மேலும் நிதிக் கூற்றின் ஏசீஏ 5 மாதிரிப்படிவத்தின் அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணத்தின் கீழ் குறுக்குக் குறிப்பு மூலம் செலவுவைத்தல் ரூ. 20,688,652 ஆகும் என்பதுடன்

எஸ்ஏ – 52 திறைசேரி மாதிரிப்படிவத்தின் குறுக்கு குறிப்பு மூலம் செலவுவைத்தல் ரூ. 2,056,264 ஆகக் காணப்பட்டதனால் ரூ. 18,632,388 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது. இதற்கமைய ஏசீஏ 5 மற்றும் எஸ்ஏ 52 ஆகிய மாதிரிப்படிவங்களுக்கு இடையே காசு மற்றும் குறுக்குக் குறிப்பு மூலம் பெறுகைகளுக்கு இடையே ரூ. 18,632,388 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ii) நிதிக் கூற்றில் ஏசீஏ – 5 மாதிரிப்படிவத்தில் அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணத்தின் கீழ் காசாக முற்பணம் செலுத்தல் ரூ. 5,450 ஆகும் என்பதுடன், எஸ்ஏ 52 திறைசேரி மாதிரிப்படிவத்தில் மேற்படி பெறுமதி ரூ. 2,944,250 ஆகக் காணப்பட்டது. மேலும், நிதிக் கூற்றின் ஏசீஏ 5 மாதிரிப்படிவத்தின் அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணத்தின் கீழ் குறுக்குக் குறிப்பு மூலம் முற்பணம் செலுத்தல் ரூ. 5,770,437 ஆகும் என்பதுடன் எஸ்ஏ – 52 திறைசேரி மாதிரிப்படிவத்திற்கு அமைய மீதி ரூ. 2,831,637 ஆகக் காணப்பட்டதனால் ரூ. 2,938,800 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது. இதற்கமைய இரண்டு மாதிரிப்படிவங்களுக்கும் இடையே காசு மற்றும் குறுக்குக் குறிப்பு மூலம் கொடுப்பனவுகளுக்கு இடையே ரூ. 2,938,800 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது.

**(ஆ) களஞ்சிய முற்பணக் கணக்கு**

(i) களஞ்சிய முற்பணக் கணக்கின் மூலம் செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்குக்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி செய்த வேலைகள் முற்பணக் கணக்கில் ரூபா 204,588,585 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், களஞ்சிய முற்பணக் கணக்கில் விநியோகிக்கப்பட்டதன் பெறுமதி ரூபா 204,647,488 ஆக காணப்பட்டதனால் குறித்த இரு கணக்குகளுக்கும் இடையே ரூ. 58,904 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ii)செலவினத்திற்கு 10 சதவீதமான பெறுமதியை சேர்த்து களஞ்சியப் பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கமைய மீளாய்வு ஆண்டில் விநியோகிக்கப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 182,558,190 ஆக வேண்டும். எனினும் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய இருப்புக்களை வெளியிடும் செலவினம் ரூபா 174,236,395 ஆக இருந்ததனால் மீளாய்வு ஆண்டில் இருப்புக்களை விநியோகிக்கும் பெறுமதி ரூபா 8,321,795 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

**(இ) அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**

(i) 2004 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் 3.2 பிரிவுக்கு அமைய இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவையை குறித்த இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலகத்திலிருந்து ஒரே தடவையில் அறவிட்டுக் கொள்ள வேண்டுமாயினும் 2016.04.11 ஆம் திகதி கொழும்பு மாநகர சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஒரு அலுவலரிடமிருந்து 05 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூ. 138,300 ஆன இடர் கடன் நிலுவை, 2022 சனவரி மாதம் முதல் தவணை அடிப்படையில் அறவிடப்பட்டு வருகின்ற போதிலும் 2022 ஆகஸ்ட் முதல் தவணை அடிப்படையிலேனும் அறவிட்டுக் கொள்ள முடியாது போயிருந்தமை கணக்காய்வின் போது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ii) யாராயினும் ஒரு அலுவலர், கடன் தொகையை செலுத்தி முடிக்க முன்னர் ஓய்வு பெறுவாராயின், அலுவலரின் பணிக்கொடைத் தொகையிலிருந்து அல்லது அவ்வாறல்லாத பட்சத்தில் அலுவலரின் மாதாந்த ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டுமாயினும் ஓய்வு பெற்ற அலுவலர்கள் 13 பேரிடமிருந்து ரூ. 1,312,931 ஆன தொகை 03 மாதங்கள் மற்றும் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியுள்ளமை அவதானிப்புச் செய்யப்பட்டது.

(iii) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கின் தகவல்களுக்கு அமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பதவி இடைநிறுத்தப்பட்ட அலுவலர் ஒருவரிடமிருந்து கிடைக்க வேண்டியுள்ள ரூ. 145,650 ஆன தொகை 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகியும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(iv) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு முற்பணக் கணக்கின் தகவல்களுக்கு அமைய பதவி வெறிதாக்கிய அலுவலர்கள் 11 பேரிடமிருந்து அறவிடப்பட ரூ. 573,080 ஆன கடன் நிலுவை 05 வருடங்களுக்கும் மேல் அறவிடப்படாது கணாப்படுவது அவதானிப்புச் செய்யப்பட்டதுடன், பெறுமதி ரூபா 186,410 ஆன அலுவலர்கள் 03 பேரின் கடன் நிலுவை 01 வருடம் முதல் 05 வருட காலம் வரை அறவிட்டுக் கொள்ள முடியாதுள்ளது என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

**(ஈ) செய்த வேலைகளுக்கான முற்பணக் கணக்கு**

i. 2018 ஆம் ஆண்டு முதல் காணப்பட்டு வருகின்ற கடன்பட்டோரிடமிருந்து மேலதிகமான பெறுகைகள் கணக்கில் உள்ள ரூ. 16,891,719 ஆன நிலுவையில் 2009 ஆம் ஆண்டு கடன்பட்டோரான ரூ. 10,030,152 ஆன நிலுவை தீர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறு தீர்க்கப்பட்ட நிவை குறித்த மிகையாகக் கிடைத்த கடன்பட்டோருக்கு ஏற்புடைதான மீதியொன்றில்லை. அதற்கமைய 2018 ஆம் ஆண்டின் பின்னர் கடன்பட்டோரிடமிருந்து மிகையாக கிடைத்த மீதியில் 2009 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடன்பட்டோர் மீதிகள் எந்தவொரு அடிப்படையுமின்றி பிழையாக தீர்க்கப்பட்டிருந்தது.

ii. 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கடன்பட்டோரின் கூட்டுத்தொகை ரூ. 36,941,553 ஆயினும், பதிவழிப்புச் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட குழு அறிக்கைக்கு அமைய 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் கடன்பட்டோரின் கூட்டுத்தொகை ரூ. 4,045,992 ஆகும். அவ்வாறான நிலையில் நிதிக் கூற்றுக்களில் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் மேலே குறிப்பிடப்பட்ட மொத்த நிலுவையும் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### 1.6.2 வைப்புக் கணக்குகள்

இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்குள் தீர்க்கப்படாத கேள்வி வைப்புக்களின் மீதி ரூ. 848,563 ஆகும் என்பதுடன், மேற்படி மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்கள் 571 (3) இற்கமைய அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 நிதியல்லாத சொத்துக்கள்

நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 6 மாதிரிப்படிவம் மற்றும் எஸ் ஏ 82 திறைசேரி மாதிரிப் படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 284,896,200 பெறுமதியைக் கொண்ட அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், கணினி உபகரணங்கள், மின்னியல் உபகரணங்கள் மற்றும் கைத்தொழில் மற்றும் உற்பத்தி

உபகரணங்களை பௌதீக ரீதியாக இனங்காணக்கூடிய வகையில் குறியீட்டு இலக்கங்கள் இடப்பட்டிருக்கவில்லை.

### 1.6.4 நிதிச் சொத்துக்கள்

செய்த வேலைகள் முற்பணக் கணக்கில் 2022.12.31 ஆம் திகதிக்கு கடன்பட்டோர் நிலுவை ரூபா 536,724,700 ஆகும் என்பதுடன் 01 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தீர்க்கப்படாத கடன்பட்டோர் நிலுவை ரூ. 310,357,322 ஆக காணப்பட்டதனால் கடன்பட்டோர் நிலுவையை தீர்த்துக் கொள்வது மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

### 1.6.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் மீதிகள் தொடர்பில் கணக்காய்வு சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி ரூபா | சான்றுகள் இல்லாமை |
|---|---|---|---|
| (அ) | தேய்மான ஒதுக்க நிதியம் | 1,682,924 | விரிவான அட்டவணை |
| (ஆ) | 2021 இல் பதிவழிப்புச் செய்த கடன்பட்டோர் | 53,161,909 | உரிய அங்கீகாரம் |
| (இ) | 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் கொள்வனவு செய்த இயந்திரசாதனங்கள் | 16,467,739 | விரிவான அட்டவணை |
| (ஈ) | 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் கொள்வனவு செய்த தளபாடங்கள் | 765,283 | விரிவான அட்டவணை |

### 1.6.6 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவராமை

திணைக்களத்தினால் பின்வரும் ஆவணங்கள் பேணிவரப்பட்டுள்ள போதிலும், முறையாகவும், இற்றைப்படுத்தப்பட்டும் பேணிவரப்பட்டிருக்கவில்லை என்பது நிகழ்தகவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிப்புச் செய்யப்பட்டது.

| ஆவண வகை | ஏற்புடைய ஒழுங்குவிதி | அவதானிப்பு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| இழப்பு நட்டம் பற்றிய பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகள் | PD-9101 எனும் இலக்க வாகனம் தொடர்பில் 2021.11.29 ஆம் திகதி இடம்பெற்ற விபத்து பற்றிய தகவல்கள் உட்புகுத்தப்பட்டிருக்கவில்லை |
| பொறுப்புக்களின் பதிவேடு | நிதிப் பிரமாணம் 445 இன் ஏற்பாடுகள் | பொறுப்புக்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 453 இன் ஏற்பாடுகள் | இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை செய்துகொள்ளல்**

நிதிக் கூற்றில் உள்ளடங்கும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூ. 1,191,508 பெறுமதியான பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

**2.2 வங்கிக் கணக்குகள்**

திணைக்களத்தினால் பேணிவரப்படுகின்ற 7042729 ஆம் இலக்க வங்கிக் கணக்கு தொடர்பாக 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 167,145 பெறுமதியைக் கொண்ட 06 மாதங்களுக்கு மேல் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 396(ஈ) இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3 கணக்கீட்டு அலுவலர் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கீட்டு அலுவலர் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்த வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை பேணிவருவதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சான்றுப்படுத்த வேண்டும் என்பதுடன், மேற்படி முறைமையின் விளைதிறன் பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்து அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்கவாறு பேணிவருவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும், மேற்படி மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக கணக்காய்வுக்கு கூற்றுக்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாமை

நிகழ்தகவு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | | ஒவ்வாமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் 571 | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் பற்றிய பட்டியல் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2019 டிசம்பர் 17 ஆம் திகதிய அரச நிதிகள் சுற்றறிக்கை இலக்கம் 08/2019 இன் 2.1, 2.2, 2.3, 2.4 மற்றும் 2.5 ஆம் பந்திகள் | 2020 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் இலத்திரனியல் அரச பெறுகை முறைமையில் பதிவு செய்திருத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| (இ) | 2020 அக்டோபர் 02 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 இன் 03 ஆம் பந்தி | புதுப்பிக்கப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்கள் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்காக 2021 சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 01/2017 ஆம் இலக்க 2017 யூன் 28 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் | |
| | (i) 5 ஆம் பந்தி | திறைசேரி கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு நிறுவனத்திற்கு உரித்தான ரூ. 72,379,000 ஆன வாகனம் மற்றும் ரூ. 278,543,676 இயந்திரசாதனங்கள் பற்றி அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 7 ஆம் பந்தி | மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 7,335,911 பெறுமதிமிக்க தொடர்புசாதன உபகரணங்கள் மற்றும் கைத்தொழில் மற்றும் உற்பத்தி உபகரணங்கள் பற்றி கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 01/2020 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிகள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் | 2020 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட முடியாதுபோன 41-9170 ஆம் இலக்க வாகனத்தை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 2.5 தத்துவமளிக்கப்படாத செயற்படு நட்டம்

நி.பி. 513 இற்கமைய 2022 ஆம் ஆண்டில் செய்த வேலைகள் முற்பணக் கணக்கில் (31003) தத்துவமளிக்கப்படாத செயற்படு நட்டம் ரூ. 44,120,843 ஆகும்.

இது தொடர்பாக 2022 நவம்பர் 30 ஆம் திகதிக்கு தயார் செய்யப்பட்ட இலப நட்டக் கணக்குக்கு அமைய தேறிய நட்டம் ரூ.மி. 32 ஆகும் என்றும் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு எதிர்பார்க்கப்பட்ட நட்டத்துக்காக ரூபா மில்லியன் 150 ஆன ஏற்பாடுகள் 310-2-1-0-1701 செலவு விடயத்திற்கு செய்துகொடுக்குமாறு 2022 டிசம்பர் 16 ஆம் திகதிய 2C/வரையறை திருத்தம்/365/02/(2022-2025) எனும் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்ட தொழில்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் (பதில்) கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள போதிலும் 2022 மே 19 ஆம் திகதி வரை செயற்படு நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்கு மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதன் தாமதம்

(அ) தபால் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவுக்கு தற்காலிக கட்டிடமொன்றை கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூ. 104, 412,899 ஆன மதிப்பீட்டு செலவினக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தபால் திணைக்களம் இணக்கம் தெரிவித்து 2020 மார்ச் மாதம் 06 ஆம் திகதி முற்பணமாக ரூபா 22,199,572 ஆன தொகை திணைக்களத்திற்குப் பெற்றுத்தரப்பட்டது. அவ்வாறாயினும் கருத்திட்டத்தின் முன்னேற்றம் 10 சதவீதமாக இருந்தது.

(ஆ) நீர்ப்பாசன திணைக்களத்தின் எல்லேவெவ நீர்க் கதவுகளை நிர்மாணித்து பொருத்துவதற்காக மீளாய்வு ஆண்டில் குறித்த இலக்குசார் ஏற்பாடுகள் ரூ. 14,178,200 ஆகும் என்பதுடன், பௌதீக முன்னேற்றம் 5 சதவீதம் மாத்திரமாகும்.

(இ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊவா குடாஓயா குளத்திற்கு நீர்க் கதவுகளை பொருத்துவதற்கான ரூபா 12,708,000 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 20 சதவீதம் மாத்திரமாகும்.

(ஈ) தொல்பொருளியல் திணைக்களத்தின் தீகவாபி தூபிக்கான மாதிரியமைப்பை தயார் செய்வதற்கான ரூபா 4,147,400 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியைக் கொண்ட கருத்திட்டம் 5 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தை மாத்திரம் அடையப்பெற்றுள்ளது.

#### 3.1.2 கருத்திட்டங்களை நிறைவேற்றதாத கைவிடப்பட்டமை

(அ) மத்திய கலாசார நிதியத்தின் 191 விளக்குத் தூண்களை வழங்கும் ரூ. 32,391,346 பெறுமதிமிக்க கருத்திட்டம் இடைநடுவே கைவிடப்பட்டிருந்ததுடன் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூ. 2,707,512 பெறுமதிமிக்க 17 விளக்குத் தூண்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததானல் பௌதீக முன்னேற்றம் 9 சதவீதம் மாத்திரமாகும்.

கருத்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட சீனச்சட்டி விளக்குத் தூண்களின் பகுதிகள், கண்ணாடி மறைப்புக்கள் மற்றும் அலுமினியம் பகுதிகள் போன்றன எஞ்சியுள்ளதுடன், உதிரிபாக வேலைத்தளம் 1 மற்றும் வேலைத்தளம் இலக்கம் 06 இல் பயன்படுத்தப்படாது காணப்படுவது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஆ) வட கொழும்பு போதனா வைத்தியசாலையில் 20 Adjustable beds கட்டில்களை உற்பத்தி செய்யும் ரூ. 400,000 பெறுமதிமிக்க கருத்திட்டம் முற்றாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பத்தேகம நீர் வழங்கும் கட்டமைப்பை தயார் செய்யும் ரூ. 159,024,118 பெறுமதிமிக்க கருத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வனசீவராசிகள் திணைக்களத்தின் லுனுகம்வெஹெர தேசிய பூங்காவின் இரும்புப் பாலத்தை திருத்தும் ரூ. 53,463,000 பெறுமதிமிக்க கருத்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

### 3.2 சொத்து முகாமைத்துவம்

(அ) திணைக்களத்திற்கு உரித்தான 37 உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்படுத்தப்படாது குறைப் பயன்பாட்டைக் கொண்டதாக காணப்பட்டதுடன், 01 ரூட் 08.87 பர்சஸ் அளவான காணியில் அமைந்துள்ள பெரல் தொழுவம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது.

(ஆ) எல்லை மதில்கள் அல்லது நிரந்தர வேலி இட்டு திணைக்களத்திற்கு உரித்தான காணிகளைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக அரசாங்க தொழில்சாலைகள் திணைக்கள ஊழியர்களின் இல்லங்கள் அமைந்துள்ள காணியின் எஞ்சியுள்ள 01 ஏக்கர் 03 ரூட் 11 பர்சஸ் அளவான காணிப்பகுதி சட்டவிரோத வசிப்பாளர்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களம் அமைந்துள்ள காணி உள்ளடங்களாக திணைக்களத்திற்கு உரித்தான மொத்தம் 24 ஏக்கர் 01 ரூட் 1.87 பர்சஸ் அளவான காணிகளுக்கான உறுதிகள் திணைக்களத்திடம் இல்லை என்பதுடன் நில அளவைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதேச செயலாளர் ஊடாக உரிமையை உறுதி செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) களஞ்சிய முற்பணக் கணக்கின் கீழான இருப்பு மீள்மதிப்பீட்டு அறிக்கைகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட நிகழ்தகவு அடிப்படையிலான பரிசோதனைக்கு அமைய சீ பிரிவின் களஞ்சியத்தில் ரூ. 2,689,162 பெறுமதிமிக்க 285 விடயங்கள், ஐ பிரிவின் களஞ்சியத்தில் ரூ. 24,591,684 பெறுமதிமிக்க 166 விடயங்கள் மற்றும் ஏ பிரிவில் ரூ. 16,964,968 பெறுமதிமிக்க 281 விடயங்கள் குறிப்பிடத்தக்களவு காலம் விநியோகிக்கப்படாது பேணிவரப்பட்டதன் மூலம் வருடாந்தம் இதற்கான பராமரிப்பு செலவினத்தை தாங்கிக் கொள்வதற்கும், களஞ்சியங்களில் இடவசதிகள் தட்டுப்பாடாக உள்ளமையும், இருப்புப் பரிசோதனைக்கு ஊழியம் மற்றும் நேரம் அநாவசியமாக செலவாவதும், இருப்புக்கள் காலாவதியாக வாய்ப்புள்ளமையும் காரணமாக அவற்றின் பெறுமதி குறைவடைவதும் அவதானிப்புச் செய்யப்பட்டது.

## 4. மனிதவள முகாமைத்துவம்

### 4.1 இணைப்புச் செய்யப்பட்டுள்ள பதவியணி, உண்மைப் பதவியணி மற்றும் ஆளுக்குரிய சம்பளங்களுக்கான செலவினம்

2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட, உண்மை, வெற்றிடமான பதவியணி தொடர்பிலான விபரம் கீழே தரப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டுக்கு ஆளுக்குரிய சம்பளம் மற்றும் வேதனாதிகள் செலவினத் தொகுதிக்கு ரூபா மில்லியன் 97 செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய தனிநபர் செலவினம் ரூபா 257,030 ஆகும்.

| **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை** | **உண்மையாக உள்ள பதவியணி எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 31 | 18 | 15 |
| மூன்றாம் நிலை மட்டம் | 10 | 02 | 08 |
| இரண்டாம் நிலை மட்டம் | 282 | 149 | 134 |
| ஆரம்ப மட்டம் | 446 | 189 | 266 |
| வேறு | - | - | - |
| **மொத்தம்** | **769** | **349** | **423** |

423 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன் பணிகளின் அளவுகளின் அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்கு அல்லது தேவைகளுக்கு அமைய பதவிகளின் எண்ணிக்கையை திருத்தம் செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**கையொப்பம் / எச்.ஏ.டி. சாந்தனீ**

சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக.

## 04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 திணைக்களத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | உத்தேச பூர்த்தி செய்ததன் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டவை | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| மேற்கொண்ட வேலைகள் முற்பணம் | √ | | |
| மூலதன செலவினம் | | | √ |

## 05 ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

### 5.1 இனங்காணப்பட்ட உரிய நிறைவேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| இலக்கு / நோக்கங்கள் | இலக்கு | வெற்றிச் சுட்டிகள் | இதுவரை வெற்றி பெற்றுள்ளதன் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| சுத்தமான நீர் மற்றும் துப்பரவேட்பாடு | 100% | | | | √ |
| புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாடு | 100% | | √ | | |
| LED மின் குமிழ் பயன்பாடு | 100% | | | √ | |

### 5.2 நிறைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்

- மின்சாரம் மற்றும் நீர் கணக்காய்வுக்காக கட்டிடம் / வேலைத்தளங்களுக்கு நீர் மானி / மின்மானிகளை பொருத்தல்.
- Mercury மற்றும் CFL பயன்பாடு மற்றும் கொள்வனவை குறைத்து LED/ சூரிய கலன் உபயோகத்ஐ ஊக்குவித்தல்.
- கழிவுப்பொருள் முகாமைத்துவம்.
- பகல்நேரத்தில் ஒளியூட்டுவதற்கு முடிந்தளவு சூரிய வெளிச்சத்தைப் பயன்படுத்தல்.
- பசுமைக் கட்டிடம் எண்ணக்கருவுக்கு ஆயத்தமாதல்.
- மதிலைச் சுற்றி மற்றும் உட்பக்கமாக சூரிய சக்தி மூலமான மின்விளக்குகளை பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# 06 ஆம் அத்தியாயம் - மனித வளத் தோற்றப்பாடு

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| மட்டம் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | வெற்றிடம் / (மிகை) |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 31 | 20 | 11 |
| மூன்றாம் நிலை | 10 | 04 | 06 |
| இரண்டாம் நிலை | 282 | 174 | 108 |
| ஆரம்ப | 447 | 189 | 258 |
| **மொத்தம்** | **770** | **387** | **383** |

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனிதவளப் பற்றாக்குறை / மிகையின் தாக்கம்

- ஆரம்ப தரங்களைச் சேர்ந்த பதவியணியின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 447 ஆகும் என்பதுடன் 258 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- நிறைவேற்று மற்றும் இரண்டாம் நிலைத் தரங்களைச் சேர்ந்த அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்கள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக அவ்வவ் பணிகளின் வினைத்திறனில் தாக்கம் ஏற்பட்டுள்ளது.
- ஒரே தடவையில் பல கருத்திட்டங்களில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்ற போது பதவியணிப் பற்றாக்குறை காரணமாக பெரும் தாக்கம் ஏற்படுகின்றது.
- தற்போது காணப்படுகின்ற உற்பத்திப் பணிகளுக்கு மற்றும் ஆரம்பத் தரங்களைச் சேர்ந்த அலுவலர்களுக்கு சம்பளம் மற்றும் ஊதியம் செலுத்தப்படுவது திணைக்களம் மேற்கொண்ட வேலைகளின் முற்பணக் கணக்கின் மூலமாகும் என்பதனால் மேற்படி நிதிப் பலத்தையும் கவனத்தில் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றது.

**6.3 நிறுவனத்தின் செயலாற்றுகையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பங்களிப்பு வழங்கியுள்ள முறை 2021**

| இல. | நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்றப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சித்திட்ட காலஎல்லை | ஒட்டுமொத்த முதலீடு (ரூ.) | பயிற்றுவிக்கும் வகை (உள்நாடு, வெளிநாடு) | பயிற்சி மூலம் பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 1. | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 188 | 08 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 2. | வினைத்திறன் மற்றும் வேலை முகாமைத்துவம் | 252 | 07 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 3. | பாதுகாப்பு | 28 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 4. | Ms Excel | 22 | 02 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 5. | மின்சாரம் | 67 | 02 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 6. | தொழில் அமைதி மற்றும் கலைச் செழிப்பு | 69 | 02 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 7. | மென்மையான கருத்து இல்லாமை | 80 | 03 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 8. | லீவு | 05 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 9. | NITA - NVQ தொடர்பானது | 18 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 10. | CNC | 118 | 03 நாட்கள் | | உள்நாடு | திருப்தியானது |
| 11. | தொழிலாளர் சாசனம் | 08 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 12 | மின்சார சிக்கனம் | 49 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 13 | அளவு கருவிகள் பாவனை | 41 | 02 நாட்கள் | | உள்நாடு | திருப்தியானது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | லீவு உரிய முறையில் பேணிச்செல்லல் | 45 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| 15 | அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் சட்டமுறமை | 11 | 01 நாள் | | உள்நாடு | திருப்தியானது |
| | **மொத்தம்** | **62** | | **1,732,500.00** | | |

செலவுத் தலைப்பு 310-2-1-02401 பதவியணி பயிற்சிக்கு ரூ.மி. 2 ஆன தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவை விஞ்ஞாபனம் 21/1596/304/134 இற்கமைய ரூபா 267500.00 ஆன தொகை திறைசேரிக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது. 2021 ஆண்டு இறுதி வரை பதவியணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஊழியர்கள் 62 பேருக்கு ஒதுக்கப்பட்ட நிதியை 100% செலவிட முடிந்தது.

**07 ஆம் அத்தியாயம்**

**இயைபு அறிக்கை**

| **இலக்கம்** | **ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு** | **இயைபு நிலைமை (ஏற்புடையதாகின்றது /ஏற்புடையதாவதில்லை)** | **ஏற்புடையதாவதில்லை எனின் அதற்கான சுருக்கமான விளக்கம்** | **ஏற்புடையதாகாமையை எதிர்காலத்தில் தடுத்துக் கொள்வதற்காக பிரேரிக்கும் சரியான தீர்மானம் நடவடிக்கை** |
|---|---|---|---|---|
| **1** | **கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதிக் கூற்றுக்கள் | ஏற்புடையதாகின்றது | | |
| 1.2 | அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகின்றது | | |
| 1.3 | தொழில் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வணிக முற்பணக் கணக்கு) | ஏற்புடையதாகின்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | ஏற்புடையதாகின்றது | | |
| 1.5 | விசேட முற்பணக் கணக்கு | - | | |
| 1.6 | வேறு | - | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிவருதல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிருவாக சுற்றறிக்கை 267/2018 இற்கமைய நிலையான சொத்துப் பதிவேட்டை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.2 | ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு / ஆட்களின் சம்பள அட்டைகளை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்களுக்கான பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.5 | சகல மாதாந்த கணக்குப் பொழிப்பு அறிக்கைகளையும் தயார் செய்து பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.9 | நட்டம் இழப்பு பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.10 | பொறுப்புகள் பற்றிய பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 2.11 | உபஆவணப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல் (புயு-C20) | ஏற்புடையதாகின்றது | | |
| **03** | **நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகள் பகிரப்பட்டிருத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரம் நிறுவனத்திற்குள் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.2 | நிதி அதிகாரத்தை பொறுப்பளிப்பது பற்றி நிறுவனத்திற்குள் விழிப்புணர்வூட்டியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் அலுவலர்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையானோர் ஊடாக அங்கீகரிக்கப்படக் கூடியவாறு அதிகாரம் பொறுப்பளிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 3.4 | 2014.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பள ஆவண மென்பொருள் பொதி (பெகேஜ்) யை பயன்படுத்தும் போது கணக்காளரின் நிருவாகத்திற்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| **4** | **வருடாந்த திட்டங்களைத் தயார் செய்தல்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4.1 | வருடாந்த செயற்றிட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.2 | வருடாந்த பெறுகைத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயார் செய்து தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் உரிய திகதியில் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 4.5 | வருடாந்த காசோட்டக் கூற்றை உரிய திகதியில் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதியில், சகல கணக்காய்வு வினாக்களுக்கும் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) னுஆயு.:.1-2019 இற்கமைய, ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தை தயார் செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.2 | ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு அறிக்கைக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் விடையளித்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | கொவிட் தொற்று நிலைமை காரணமாக ஏனைய காரணங்கள் | கட்டுப்படுத்த முடியாத காரணங்கள் தவிர ஏனைய தாமதங்கள் தொடர்பில் உரிய தரப்பினர்களை விழிப்புணர்வூட்டல் |
| 6.3 | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4) உட்பிரிவுக்கு அமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 6.4 | நிதிப் பிரமாணம் 134(3) இற்கமைய, சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7.1 | னுஆயு சுற்றறிக்கை 1-2019 இற்கமைய, ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 உரிய ஆண்டில் நடாத்தியிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| **8** | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 8.1 | 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.2 | மேற்படி சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்திற்கு அமைய, மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புக்கு பொருத்தமான ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவரை நியமனம் செய்து மேற்படி அலுவலர் பற்றிய தகவல்களை கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.3 | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இற்கமைய பொருட் கணிப்பீட்டை நடாத்தி குறித்த அறிக்கைகளை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.4 | வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறை மற்றும் வேறு சிபாரிசுகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலப்பகுதிக்குள் மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 8.5 | சேதமடைந்த பொருட்களை அகற்றுவதை நி.பி. 772 இற்கமைய மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயார் செய்து உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பித்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.2 | வாகனங்கள் சேதமடைந்து 6 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் அகற்றியிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.3 | வாகன லொக் புத்தகங்களைப் பேணிவருவதுடன் அவற்றை இற்றைப்படுத்தி பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9.4 | ஒவ்வொரு வாகனம் தொடர்பிலும் நி.பி. 103,104,109, மற்றும் 110 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பற்றி மீள் பரிசீலனை செய்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 9.6 | லீசின் கொள்வனவுக் கால எல்லையின் பின்னர், லீசின் கொள்வனவு வாகனங்கள் லொக் புத்தகங்களில் முழு உரித்தையும் சாட்டுதல் செய்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **10** | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | | | |
| 10.1 | உரிய திகதிக்கு வங்கி இணக்கக் கூற்றுக்களைத் தயார் செய்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்பட்டுள்ள செயற்படாத வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | | |
| 10.3 | வங்கி இணக்கக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற மற்றும் சீராக்கல் செய்ய வேண்டியிருந்த நிலுவைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொண்டு மேற்படி நிலுவைகளை ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்த்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| **11** | **ஏற்பாடுகளைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அவற்றின் வரையறைகளை தாண்டாதவாறு செலவிடல் | ஏற்புடையதாகின்றது | | |
| 11.2 | நி.பி. 94(1) இற்கமைய செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளில் பயன்படுத்திய பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஏற்பாடுகளை வரையறைகளைத் தாண்டாதவாறு பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | வரையறைகளுக்கு ஏற்புடையதாதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 12.2 | நிலுவையாக உள்ள கடன் நிலுவைகள் பற்றிய காலப் பகுப்பாய்வை மேற்கொள்ளல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவையாக உள்ள கடன் நிலுவைகளைத் தீர்த்திருத்தல் | ஏற்புடையதாவதில்லை | | 2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு மாதமும் மீதிகளை பரிசோதித்து அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பூர்த்தியடைந்த வைப்புக்கள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைப்படுத்திப் பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| **14** | **கட்டுநிதிக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசேட்டின் மீதி திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.2 | நி.பி. 371 இற்கமைய வழங்கப்பட்ட குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி, மேற்படி பணி நிறைவு செய்யப்பட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் தீர்க்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 14.3 | நி.பி. 371 இற்கமைய அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளைத் தாண்டாதவாறு குறித்த பணிக்கான இடைக்கால கட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 14.4 | கட்டுநிதிக் கணக்கின் மீதி, திறைசேரியின் பதிவேடுகளுடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல். | ஏற்புடையதாகின்றது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | குறித்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளச் செலுத்தல்கள் செலுத்தப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 15.2 | சேகரிக்கப்பட்ட வருமானங்கள், வைப்புக் கணக்கில் செலவு வைக்காது நேரடியாக வருமானத்திற்கு செலவு வைத்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 15.3 | நி.பி. 176 இற்கமைய நிலுவை வருமான அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **16** | **மனிதவள முகாமைத்துவம்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வரையறைக்குள் பதவியணியை பேணிவருதல் | ஏற்புடையதாகின்றது | | |
| 16.2 | பதவியணியின் சகல அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 16.3 | 20.09.2017 ஆம் திகதிய ஆளுனு சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய சகல அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **17** | **பொது மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்** | | | |
| 17.1 | தகவல் அறியும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் ஒருவரை நியமனம் செய்து தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல். | ஏற்புடையதாகின்றது | | |
| 17.2 | நிறுவனம் பற்றிய தகவல்கள் அதன் இணையத்தளம் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், இணையத்தளம் அல்லது மாற்றுவழிமுறைகள் ஊடாக நிறுவனம் பற்றி பொது மக்களின் பாராட்டுக்கள் / பிரேரணைகளை வெளியிடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருத்தல். | ஏற்புடையதாகின்றது | | |
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு அமைய ஒவ்வொரு வருடமும் இரண்டு தடவை அல்லது ஒரு வருடத்தில் ஒரு தடவை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **18** | **பிரசைகள் பிரகடனத்தை அமுல்படுத்தல்** | | | |
| 18.1 | 05/2008 ஆம் இலக்க மற்றும் 05/2008(1) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள் / சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்து | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமுல்படுத்தியிருத்தல். | | | |
| 18.2 | மேற்படி சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு அமைய, பிரசைகள் /சேவைபெறுநர் பிரகடனத்தை தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்தல், மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தினால் முறையியல் ஒன்று தயார் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| **19** | **மனிதவள திட்டத்தை தயார் செய்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 இன் மாதிரிப் படிவத்தின் அடிப்படையில் மனிதவளத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளமை | ஏற்புடையதாகின்றது | | |
| 19.2 | பதவியணியின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வருடத்திற்கு ஆகக் குறைந்தது 12 மணி நேரத்திற்குக் குறையாத பயிற்சி வாய்ப்பை மேற்படி மனிதவளத் திட்டத்தில் உறுதி செய்திருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19.3 | மேலுள்ள சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |
| 19.4 | மேற்படி சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு அமைய மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் பொறுப்புக்கள் அளிக்கப்பட்டுள்ள சிரே‘ட அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருத்தல் | ஏற்புடையதாகின்றது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **20** | **கணக்காய்வு பந்திகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்** | | | |
| 20.1 | கடந்த ஆண்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சீராக்கல் செய்யப்பட்டுள்ளமை. | ஏற்புடையதாகின்றது | | |

### 7.1 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

01. வழங்கப்பட்டிருக்கின்ற உள்ளகக் கணக்காய்வு அறிக்கை 2022

2022 வருடத்தில் கணக்காய்வுத் திடடத்திற்கு அமைய செயற்பாடுகள் 12 திட்டமிடப்பட்டு இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுத் திட்ட மீளாய்வின்படி 7வது இலக்க ஆண்டுக்கான இரும்புப் பொருட்களின் கணக்கெடுப்பு செயற்பாடு கணக்காய்வுக்கான வேலைப்பகுதி ஊழியர்களின் லீவு கணக்காய்வுக்கு உட்படுத்தி ஆண்டினுள் 12 அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன

02. திணைக்கள கணக்காய்வு முகாமைத்துவகுழு கூட்டங்கள் நடத்துதல் 2022

2022 வருடத்தில் திட்டமிடப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டங்கள் 4உம் நடாத்தப்பட்டன

| காலாண்டு | *நடத்திய நாள்* |
|---|---|
| முதலாவது காலாண்டு | 2022.02.22 |
| இரண்டாவது காலாண்டு | 2022.06.09 |
| மூன்றாம் காலாண்டு | 2022.08.30 |
| நான்காம் காலாண்டு | 2022.11.29 |

03. காலாண்டுக்கான மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்தல் 2022

| காலாண்டு | திகதிகள் |
|---|---|
| 2021/04 | 2022.01.11 |
| 2022/01 | 2022.05.05 |
| 2022/02 | 2022.08.03 |
| 2022/03 | 2022.10.19 |

04. அமைச்சினால் நடாத்தப்படும் கணக்காய்வு முகாமைத்துவக்குழு கூட்டங்களுக்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல் 2022

| திகதிகள் |
|---|
| 2022.03.09 |
| 2022.08.23 |
| 2022.10.19 |
| 2022.12.02 |

05. **ஏனையவை**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் மேலே கூறப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டன. இது தொடர்பாக பின் தொடர்தல் மேற்கொள்ளப்பட்டு தொடர்பான கட்சியினரின் பதில்கள் ஆய்வு செய்யப்பட்டு அவசியமான திருத்தங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்ட்ங்களில் வேலை வெற்றிடங்கள், ஆட்சேர்ப்பு, அரச ஊழியர் முற்பணக்கணக்கு, செய்யப்பட்ட வேலை முற்பணக்கணக்கு கடன்பட்டோர் வருமதி, அரச

இல்லங்கள், நிறுவனத்தின் நடைமுறைச் செலவு மற்றும் மூலதனச் செலவுகள் முன்னேற்றம், வருடாந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் உள்ளக வெளியாக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விடையளிக்கும் முன்னேற்றம் போன்றவை தொடர்பாக அவதானம் செலுத்தி அவசியமான செயற்பாடுகள் நிறைவேற்றப்படடன.

அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்